கேப்டன் மஞ்சித் சிங் விர்தி (ஓய்வு)

–எதிர்–

ஹுசைன் முஹம்மத் ஷட்டாஃப் மற்றும் பலர்

(குற்றவியல் மேல்முறையீடு எண்.1399/2023)

மே 18, 2023

[மாண்புமிகு நீதியரசர்கள் திரு. அபய் எஸ்.ஓகா

மற்றும் திரு.ராஜேஷ் பிந்தல்]

குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973 – விடுவிப்பிற்கான விண்ணப்பம் – பலியானவரின் உடல், அவரது படுக்கையறையில் இரத்த வெள்ளத்தில் கிடந்தது – புலன் விசாரணைக்குப் பிறகு 1 மற்றும் 2–ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது – விசாரணை நீதிமன்றம் இதுவரை குற்றங்கள் வனையவில்லை – குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த உடனேயே விடுவிப்புக்கான விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது – இது விசாரணை நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. இருப்பினும், விசாரணை நீதிமன்றம் வழங்கிய உத்தரவை, உயர்நீதிமன்றம் நீக்கறவு செய்து, 1 மற்றும் 2–ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களை விடுவித்தது. மேல்முறையீட்டில், தீர்முடிவுகள்: குற்றச்சாட்டுகளின் கேட்புகையின்போது, அரசுத்தரப்பில், சமர்ப்பிக்கப்பட்ட முழுசாட்சியமும் நம்பப்படவேண்டும் என்பது சட்ட அறுதியுரையாகும் – வழக்கு நிரூபிக்கப்படாத பட்சத்தில் மட்டுமே எதிரி விடுவிக்கப்படுவார் – குற்றச்சாட்டின்போது, எதிரிக்கு எதிராக, வழக்கு முகாந்திரம் நிறுவப்பட்டது என்று நீதிமன்றம் திருப்தியுற வேண்டும் – இந்த குறிப்பிட்ட வழக்கில், புலனாய்வு முகமையால்,சேகரிக்கப்பட்ட சான்றுகளுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள முழு குற்ற அறிக்கையையும், உயர்நீதிமன்றம்

குறிப்பிடவில்லை – மாறாக விசாரணையின்போது, பதிவுசெய்யப்பட்ட சில நபர்களின் வாக்குமூலங்களை, குறிப்பிட்டு காட்டியது – குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மற்றும் 1–ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் மற்றும் பிற கூட்டாளிகளின் உளவியல் விவரக்குறிப்பு, பாலிகிராஃப் பரிசோதனை மற்றும் மூளை மின் அலைவுகளின் பதிவுக்குறிப்பு (BEOS) பரிசோதனைகள் உட்பட உளவியல் மதிப்பீடு பற்றிய குறிப்பு எதுவும் இல்லை – யோசனையின்றி 1 மற்றும் 2–ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் ஆகியோர் விடுவிக்கப்பட்டனர் – ஒரு கடுங்குற்றத்தின் விசாரணையை ஒத்திவைப்பதற்காக உயர்நீதிமன்றம் தனது அதிகாரத்தை பயன்படுத்தியிருக்கிறது.

மேல்முறையீட்டை அனுமதித்த இந்நீதிமன்றம் தீர்மானித்ததாவது:–

1. குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்த சமயத்தில், எவ்வாறான சட்ட பிரச்சினை பரிசீலிக்கப்பட வேண்டியவை என்பது நன்கு அறுதியிடப்பட்டது. இது, விசாரணை நீதி மன்றத்தால் இது வரை குற்றச்சாட்டகள் வணையப்படாத வழக்காகும். குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட உடனே, விடுவிப்புக்கான விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. குற்றச்சாட்டுகள் கேட்கப்பட்ட நிலையில், அரசுத் தரப்பால் தாக்கல் செய்யப்பட்ட முழு சான்றுகளும் நம்பப்பட வேண்டும் என்பதே முடிவு செய்யப்பட்ட சட்ட அறுதியுரையாகும். குற்றம் ஏதும் நிருபிக்கப்படவில்லை என்றால் மட்டுமே, எதிரி விடுவிக்கப்படுவார். விசாரணை நிலையில் தான், தாக்கல் செய்யப்பட்ட சான்றுப்பொருட்களின் தன்மை, நிறைவுத்தன்மை மற்றும் ஏற்புடமை ஆகியவை குறித்து, பரிசீலனை செய்ய முடியும். குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில், குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக நிருபிக்கப்பட்ட வழக்கு முகாந்திரத்தில் நீதிமன்றம் திருப்தியுற வேண்டும். வழக்கை விசாரிக்க

அனுமதிக்கப்பட்டால், அது நீதிமன்றத்தின் நடவடிக்கைகளை தவறாகப் பயன்படுத்துவதற்கு ஒப்பாகும் என்பதை தீர்மானிக்க வலுவான காரணங்கள் இருந்தால் மட்டுமே, அந்நிலையில் நீதி மன்றத்தின் தலையீடு தேவைப்படும்.

2. உயர்நீதிமன்றம் அதன் எதிர்ப்புக்குள்ளான உத்தரவு மூலம், எதிரி மற்றும் 1–ம் எதிர்மேல்முறையீட்டாளரின் மற்ற கூட்டாளிகளின் உளவியல் விவரக்குறிப்பு, பாலிகிராஃப் பரிசோதனை மற்றும் மூளை மின் அலைவுகளின் பதிவுக் குறிப்பு (BEOS) பரிசோதனைகள் உட்பட உளவியல் மதிப்பீட்டை குறித்துக்காட்டாமல், முழுசாட்சியத்தையும் இரண்டு பத்திகளுக்குள் உள்ளடக்கி, 1 மற்றும் 2–ம் எதிர்மேல்முறையீட்டாளர்களை விடுவிக்க உத்தரவிட்டது.

3. எதிரியைத் தண்டிக்க உளவியல் சார் மதிப்பீடு பரிசோதனை அறிக்கை மட்டுமே போதுமானதாக இல்லை என்றாலும் கட்டாயமாக, அது ஒரு முக்கிய சான்று ஆகும். இந்த பதிவாவணத்தின் சான்றுக்கு அப்பால், குற்றத்தை வனைவதற்காக கூட, வழக்கு நிருபிக்கப்படவில்லை என்றும் அதற்காக வழக்கு முகாந்திரத்தை மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டும் என்று உயர்நீதிமன்றம் தெரிவித்திருக்க கூடாது.

4. இந்த வழக்கு குறித்து இந்நீதிமன்றத்தால் வகுததுரைக்கப்பட்ட சட்டத்தின் துணை கொண்டு சங்கதிகளை ஆராய்ந்தால், விசாரணை முகமையால் சேகரிக்கப்பட்ட சான்றுகளுடன் முழு குற்ற அறிக்கையுடன் சேர்த்து தாக்கல் செய்ததை உயர் நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது. மாறாக விசாரணையின் போது, பதிவு செய்யப்பட் சிலரின் வாக்குமூலங்கள்

தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது முழுமையாக மனக்கூறுதனை செலுத்தாமையையே காட்டுகிறது. கடுங்குற்றத்தின் விசாராணையை முறிக்கும்வண்ணம், உயர் நீதிமன்றம் பெற்றிராத அதன் அதிகாரத்தை செலுத்தியுள்ளது.

ராஜஸ்தான் மாநில அரசு –எதிர்– அசோக் குமார் காஷ்யப் (2021) 11 எஸ்.சி.சி. 191 – சார்வுறப்பட்டது

மகாராஷ்டிரா மாநில அரசு மற்றும் ஒருவர் –எதிர்– மரோட்டி, த/பெ. காஷிநாத் பிம்பல்கர் (2023) 4 எஸ்.சி.சி. 298 – பார்வைக்கு வைக்கப்பட்ட வழக்கு

<u>பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்</u>

(2023) 4 எஸ்.சி.சி 298	குறிப்பிடப்பட்டது	பத்தி 4
(2021) 11 எஸ்.சி.சி 191	குறிப்பிடப்பட்டது	பத்தி 12

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு : குற்றவியல் மேல்முறையீடு எண்.1399/2023.

பம்பாய் உயர்நீதிமன்ற 17.07.2013 தேதியிட்ட தீப்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து குற்றவியல் சீராய்வு விண்ணப்பம் (CRLRA) எண் 135/2012 – லிருந்து எழுகிறது.

குணால் சீமா, ஷிவம் துபே, ராகவ் தேஷ் பண்டே ஆகியோர் மேல்முறையீட்டாளர்களுக்கான வழக்குரைஞர்கள்.

சித்தார்த்த டாவே, மூத்த வழக்கறிஞர், ஹிமான் ஷீ பூஷன், செல்வி. ஆக்ரிட்டி ப்ரியா, கானு அகர்வால், சித்தார்ட் தர்மதிகாரி ஆதித்யா அணிருத்தா பாண்டே, பாரத் பக்லா, சவ்ரவ் சிங் ஆகியோர் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கான வழக்குரைஞர்கள்.

இந்நீதிமன்ற தீர்ப்புரையானது மாண்புமிகு நீதியரசர் திரு. ராஜேஷ் பிந்தல் அவர்களால் பகரப்பட்டது.

1. பம்பாய் உயர்நீதிமன்றத்தின் சீராய்வு மனு எண்.135/2012 இல் பிறப்பிக்கட்டுள்ள 17.07.2013 தேதியிட்ட உத்தரவை மேல்முறையீட்டாளர் எதிர்த்துளளார். மேற்கூறிய உத்தரவில் 1 மற்றும் 2–ஆம் மனுதாரர்கள் தங்களின் விடுவிப்புக்காக, கீழமை நீதிமன்றத்தில், தாக்கல் செய்த மனுவை, 21.02.2012 அன்று தள்ளுபடி செய்த உத்தரவினை, நீக்கறவு செய்து, உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

2. விர்தி மாளிகை, தெம்பேர்வாடி, லோனாவாலாவில் வசிப்பவரான மன்மோகன்சிங் சுகாதேவ் சிங் விர்தியின் கொலை தொடர்பாக, வோனாவாலா, மாநகர காவல் நிலையத்தில் 14.05.2006 அன்று பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கை எண் 46/2006 லிருந்து இந்த பிரச்சனை எழுகிறது. அவரது உடல், அவருடைய படுக்கை அறையில், ரத்த வெள்ளத்தில் காணப்பட்டது.

3. மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர், உயர்நீதிமன்றம் பிறப்பித்த எதிர்ப்புக்குள்ளான உத்தரவினை சாதாரணமாக படித்து பார்த்தாலே, காவல் துறையினரால், விசாரணையின் போது பதிவு செய்யப்பட்ட சில வாக்குமூலங்களை மட்டுமே சுட்டிக்காட்டி, ஒரு குறு விசாரணையை நடத்தியுள்ளது; அதுவே குற்ற அறிக்கையின் ஒரு பகுதியாகவும் உள்ளது, என்பதை காட்டுகிறது, என பணிந்துரைத்தார். விடுவிப்புக்கான விண்ணப்பத்தை பரிசீலிக்கும் சமயத்தில் அது நீதிமன்ற அதிகார எல்லைக்கு அப்பாற்பட்ட ஒன்றாகும். முதல் எதிர்மேல்முறையீட்டாளர் மீதும் மற்றும் அவரது உதவியுடன் மற்ற நான்கு நபர்கள் மீதும் நடத்தப்பட்ட உளவியல்

விவரக்குறிப்பு, பாலிகிராஃப் பரிசோதனை மற்றும் மூளை மின்அலைவுகளின் பதிவு குறிப்பு பரிசோதனைகள் உட்பட உளவியல் மதிப்பீடுகளை, நீதிமன்றம் பரிசீலிக்கத் தவறியது. அதுவே 1 மற்றும் 2–ம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் மீது, குற்றம் சுமத்துவதற்கு வழிவகுத்துள்ளது.

4. தனது வாதுரைக்கு ஆதரவாக 'மஹாராஷ்ட்ரா அரசு மற்றும் ஒருவர் –எதிர்– டாக்டர் மரோட்டி த/பெ காசிநாத் பிம்பல்கர்' (2023) 4 எஸ்சிசி 298 என்ற வழக்கில் முடிவான தீர்ப்புரையின் மீது சார்ந்து நின்றார்.

5. வேறுவகையில் 1 மற்றும் 2–ம் எதிர்மேல்முறையீட்டாளர்களின் கற்றறிந்த வழக்குரைஞர், இது தடயம் அற்ற கொலை என்பதால் அதற்கு கண்னுற்ற சாட்சி எதுவும் இல்லை எனவும் பணிந்தரைத்தார் 1 மற்றும் 2–ம் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு இறந்தவருடன் எந்த முன்விரோதமும் இல்லை. அவர்கள் அண்டை வீட்டக்காரர்களாக மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அரசு தரப்பில், ஒரு பொய்யான கதை கட்டமைக்கப்பட்டது, அதற்கு ஆதரவாக எந்த முக்கிய சான்றும் இல்லை. விசாரனை நீதிமன்றம், 1மற்றும் 2–ம் எதிர்மேல்முறையீட்டாளர்களை, விடுவித்து, தான் கொண்டுள்ள அதிகாரவரம்பை செயலுறுத்த தவறிவிட்டது என்று மேலும் பணிந்துரைக்கப்பட்டது. அவர்கள் இந்த வழக்கில் பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் விசாரனையை எதிர்கொள்வது என்பது நீதிமன்ற நடைமுறையை தவறாக பயன்படுத்துவதாகும், அரசு தரப்பால்

சேகரிக்கப்பட்ட தொடர்புடைய சான்றாவணங்கள், உயர்நீதி மன்றத்தால் பரிசீலிக்கப்பட்டது.

6. அவ்வாறே உயர்நீதி மன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை மாநில அரசு எதிர்க்கவில்லை என்றாலும், அதற்கான விளக்கத்தை மாநில அரசுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் எதுவும் கொண்டிருக்கவில்லை என்பதாலும், விடுவிப்புக்கான விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுத்துகொண்ட நிலையில், சாட்சியங்களின் மதிப்பீடு, சாத்தியம் இல்லை என்பதாலும், அது நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட பின் மற்றும் விசாரணைக்கு பிறகே முடியும் என்பதாலும் எதிர்ப்புக்குள்ளான உத்தரவு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று வாதுரைத்தார். குற்றசாட்டை வனைந்த நிலையில் மட்டுமே வழக்கு முகாந்திரம் காணப்பட வேண்டும்.

7. தரப்பினர்களின் கற்றறிந்த வழக்குரைஞரின் வாதங்களை கேட்டு, தொடர்புடைய பதிவாவணங்களை பார்வையிட்டோம்.

8. முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்பட்ட பிறகு, விசாரணை நடத்தப்பட்ட கு.ந.ச. பிரிவு 161 மற்றும் 164 இன்கீழ் பல்வேறு நபர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன. 1–ம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு, உளவியல் விவரக் குறிப்பு, பாலிகிராஃப் பரிசோதனை மற்றும் மூளை மின் அலைவுகளின் பதிவுக்குறிப்பு (BEOS) உள்ளிட்ட உளவியல் மதிப்பீடு 31.05.2007 அன்று நடத்தப்பட்ட, அதே போன்று 1–ம் எதிர்மேல்முறையிட்டாளருக்கு நெருக்கமான மற்ற நான்கு நபர்கள் அதாவது, பாலிராம், சித்து காதே, மோகன் விஜயம்மா ஹிரிதரன், அசோக் காஜ்ராஜ் சாதரி, மெஹ்பூப் டஸ்டகி ஷேக் ஆகியோர் மீதும் நடத்தப்பட்டது.

9. இது ஒரு தடயமற்ற கொலை என்பதால் குற்றம் விசாரிக்கப்பட்டு 1–ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் வியாபார நிமித்தம் துபாயில் தங்கியிருந்த போது, இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளரான அவருடைய மனைவி இறந்த நபருடன் தொடர்பு ஏற்படுத்தி, நட்பு கொண்டார் என்றும், அவர்கள் ஒருவருக்கொருவர் அடிக்கடி சந்தித்துக்கொண்டனர் என்றும், அந்த நட்பு, உடலுறவாக மாறியது என்றும் 1–ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் துபாயிலிருந்த திரும்பி வந்த போது, இது பற்றி அவருக்கு தெரியவந்தது என்றும், அதற்கு பழிவாங்கும் நோக்குடன் அவர், இரண்டாம் எதிர்மேல்முறையிட்டாளர் மற்றும் சான்னிஷ்கானின் உதவியுடன் சில அறியாத தாக்குதலாளர்கள் மூலம் இறந்தவரை கொல்ல சதித்திட்டம் தீட்டினர் என்றும் குறிப்பிட்டு ஹுசைன் முகமது ஷாட்டி, வஹீதா ஹுசைன் ஷாட்டி (1 மற்றும் 2 – ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்) மற்றும் ஜானிஷ் கான் ஆகியோருக்கு எதிராக 9.12.2009 அன்று குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

10. இது அமர்வு நீதிமன்றத்ததால் விசாரிக்கதகு வழக்கு என்பதால் நடுவர் நீதிமன்றம் இதனை, பூனே அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பியது. உடனே 1 மற்றும் 2–ஆம் எதிர் மேல்முறையீட்டாளர்கள் விடுவிப்புக்காக, சீராய்வு மனு தாக்கல் செய்தனர். அது 21.02.2012 தேதியிட்ட உத்தரவு மூலம் விசாரணை நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. உயர்நீதிமன்றம் எதிர்ப்புக்குள்ளான உத்தரவு மூலம் விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நீக்கறவு செய்து, 1 மற்றும் 2–ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களை விடுவித்தது. மேற்கூறிய உத்தரவு இந்த நீதிமன்றத்தில், எதிர்ப்புக்குள்ளாகி உள்ளது.

11. குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்த சமயத்தில், எவ்வாறான சட்ட பிரச்சினை பரிசீலிக்கப்பட வேண்டியவை என்பது நன்கு அறுதியிடப்பட்டது. இது, விசாரணை நீதி மன்றத்தால் இது வரை குற்றச்சாட்டகள் வணையப்படாத வழக்காகும். குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட உடனே, விடுவிப்புக்கான விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. குற்றச்சாட்டுகள் கேட்கப்பட்ட நிலையில், அரசுத் தரப்பால் தாக்கல் செய்யப்பட்ட முழு சான்றுகளும் நம்பப்பட வேண்டும் என்பதே முடிவு செய்யப்பட்ட சட்ட அறுதியுரையாகும். குற்றம் ஏதும் நிருபிக்கப்படவில்லை என்றால் மட்டுமே, எதிரி விடுவிக்கப்படுவார். விசாரணை நிலையில் தான், தாக்கல் செய்யப்பட்ட சான்றுப்பொருட்களின் தன்மை, நிறைவுத்தன்மை மற்றும் ஏற்புடமை ஆகியவை குறித்து, பரிசீலனை செய்ய முடியும். குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில், குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக நிருபிக்கப்பட்ட வழக்கு முகாந்திரத்தில் நீதிமன்றம் திருப்தியுற வேண்டும். வழக்கை விசாரிக்க அனுமதிக்கப்பட்டால், அது நீதிமன்றத்தின் நடவடிக்கைகளை தவறாகப் பயன்படுத்துவதற்கு ஒப்பாகும் என்பதை தீர்மானிக்க வலுவான காரணங்கள் இருந்தால் மட்டுமே, அந்நிலையில் நீதி மன்றத்தின் தலையீடு தேவைப்படும்.

12. இக்கருத்து குறித்த சட்டமானது இந்த நீதிமன்றத்தின் 'ராஜஸ்தான் அரசு எதிர் அசோக்குமார் காஷ்யாப்' (2021)11 எஸ்சிசி 191 என்ற சமீபத்திய தீர்ப்பின் சம்பந்தப்பட்ட பத்திகள் தொகுக்கப்பட்டு, கீழே தரப்பட்டுள்ளன:–

"11.1 பி. விஜயன் –எதிர்– கேரள அரசு (2010) 2 எஸ்சிசி என்ற வழக்கில் குற்ற அறிக்கை தாக்கலான நிலையில் எவற்றை

கருத்தில் கொள்ள வேண்டும் அல்லது விடுவிப்பு விண்ணப்பங்கள் எவ்வாறு பரிசீலிக்கப்படவேண்டும் என்பதை விரிவாக அந்த தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. பிரிவு–227–ன்படி நீதிபதி எதிரிக்கு எதிரான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு போதுமான காரணங்கள் உள்ளனவா? இல்லையா? என்பதை காண சாட்சியங்களை கூர்ந்து ஆராயவேண்டும். வேறு வார்த்தைகளில் கூறினால், எதிரி மீது குற்றம்சாட்டப்படுவதற்கு சந்தேகத்திற்கிடமான சூழ்நிலைகள் இருப்பதை வெளிப்படுத்துகின்ற காவல் துறையால் பதிவு செய்யப்பட்ட ஆதாரங்களின் தன்மை அல்லது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் போதுமான காரணங்களை கொண்டுள்ளன என்று கருத்துரைக்கப்பட்டது. விசாரணை வழக்கு நீதிபதியானவர், தொடர் அரசுத்தரப்பால் நிறுவப்பட்டுள்ளதா? என்பதை தீர்மானிக்கும் பொருட்டு, வாழக்கு நடவடிக்கைகளுக்கான போதுமான காரணங்கள் சங்கதிகளின்மீது நீதிச்சார் மனதை செலுத்துகையில், வழக்கின் நன்மை தீமைகள், இருப்பதாக முடிவுக்கு வருவாரேயானால், சாட்சி மற்றும் நிகழ்வுகளை மதிப்பிட்டு சமன் செய்தல் என்பது நீதிமன்றதிற்கு கு.ந.சட்டபடி அவசியமல்ல, அது விசாரனை தொடங்கிய பிறகு நீதிமன்றத்தால் குற்ற வனைவு செய்யப்பட வேண்டிய செயல்பாடாகும் என்று மேலும் கருத்துரைக்கப்பட்டது.

11.2. இந்த நீதிமன்றம், கர்நாடக அரசு –எதிர்– எம்.ஆர்.ஹைர்மாத்(2019) 7 எஸ்.சி.சி 515, என்ற வழக்கின் சமீபித்திய தீர்ப்பில், இந்த அமர்வுக்காக பேசிய எங்களில் ஒருவரான

(மாண்புமிகு நீதியரசர் திரு.சந்திரசூட்) பத்தி 25 இல், பின்வருமாறு கருத்துரைத்துள்ளார்:–

"25. விசாரணை நீதிமன்றம் விடுவிப்புக்கான விண்ணப்பத்தை விசாரித்துக் கொண்டிருக்கிறது என்ற உண்மைதனை உயர்நீதிமன்றம் (எம்.ஆர்.ஹைர்மாத் எதிர் அரசு 2017 எஸ்.சி.சி ஆன்லைன் கர்நாடகா 4970) நன்கு அறிந்திருக்க வேண்டும் இந்த நீதிமன்றத்தின் பல தீர்ப்புகளில் இந்த அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதைக் கட்டுப்படுத்தும் அளவுருக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. விடுவிப்புக்கான விண்ணப்பத்தை பரிசீலிக்கும் நிலையில் நீதிமன்றம், அரசுத்தரப்பால் பதிவாவணத்தில் கொண்டு வரப்பட்டுள்ள சான்றாவணங்கள் உண்மை எனக் கருதி, வழக்கை மேல் நடத்த வேண்டும், மேலும் முகப்பளவில் எடுத்துக்கொள்ளப்பட்ட சான்றாவணத்தில் இருந்து வெளிப்படுகின்ற சங்கதிகள் குற்றத்தை உருவாக்குகின்ற தேவையான ஆக்கக் கூறுகளை வெளிப்படுத்துகின்றனவா என்பதை தீர்மானிக்க சான்றாவணங்களை மதிப்பிட வேண்டும் என்பதும் அறுதியிடப்பட்ட சட்டக்கோட்பாடு ஆகும். 'தமிழ்நாடு அரசு –எதிர்– என்.சுரேஷ்ராஜன் (2014)11 எஸ்சிசி 709 என்ற வழக்கில் இதே பொருள்சார்ந்த முந்தைய தீர்ப்பை ஒட்டி கீழ்கண்டவாறு முடிவு எய்தப்பட்டது:–

"29..... இந்த காலக்கட்டத்தில், ஆவணங்களின் நிருபண மதீப்பீடு குறித்து ஆராயவேண்டும் மேலும் நீதிமன்றம் இந்த விடயத்தில் ஆழ்ந்து சென்று ஆவணங்கள் தண்டனைத் தீர்ப்பளிக்க உத்தரவாதம் அளிக்காது என்று தீர்மானிக்கும்படி எதிர்பார்க்கமுடியாது. எங்களுடைய கருத்தில், ஆலோசிக்கப்பட வேண்டியது யாதெனில், குற்றம் புரிந்திருக்கிறாரா இல்லையா, எதிரியை தண்டிப்பதற்கான காரணங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளனவா போன்றவைகளை அனுமானிக்க காரணங்கள் உள்ளனவா, என்பதேயாகும். வேறு வகையில் கூறுவதானால், பதிவாவணத்தில் உள்ள சான்றாவணங்களின் அடிப்படையில், அதன் நிருபண மதிப்பைக் கொண்டு எதிரி குற்றம் புரிந்துள்ளார் என்று நீதிமன்றம் கருதினால், அது தண்டிப்பிற்குரியதானாலும், எதிரி குற்றம் புரிந்துள்ளார் என்ற முடிவை எட்டி, குற்றச்சாட்டை வணையலாம். இந்நிலையில் சட்டம், ஒரு குறு விசாரணையை அனுமதிப்பதில்லை."

13. உயர்நிதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவின் தொர்புடைய பகுதிகள், பின்வருவன:–

"11.12.2006 தேதியிட்ட, சுரேஷ் தாபாவின் வாக்குமூலத்தில், அவர் பங்களாவில் விருத்தில் கலந்து கொண்டதாக கூறினார். 09.12.2007 அன்று பதிவு செய்யப்பட்ட கலெக்டர் சிங் தாக்கூரின் வாக்குமூலத்தில், 2–ம் எதிரி 13.05.2006 அன்று 7–00 மணிக்கு காகிதங்களை கிழித்து போட்டதை

குறிப்பிடுகிறார். இந்த வாக்குமூலம் எதிரி–மனுதாரர்களைப் பிடிக்க செயல்படாது ஏனெனில் சம்பவம் / கொலை இரவில் நிகழ்ந்துள்ளது திரு. சுரேஷ்தாபா, 14.05.2006 அன்று தனது வாக்குமூலத்தில், இரவில் அவர் ஒரு மேடைத்தளத்தில் அமர்ந்திருந்ததாகவும், அப்போது ஒரு கார், இறந்துபோனவரை இறக்கிவிட வந்ததாகவும் அதன்பின் இறந்துபோனவர் தனது தோட்டக்காரர் ஹரியுடன் அவரது வீட்டிற்குச் சென்றதாகவும் கூறியுள்ளார். மேலும், 28.06.2006 தேதியிட்ட வாக்குமூலத்தில், அவர் ஒரு வெள்ளிநிற டாடா இந்தியா காரைக் குறிப்பிட்டு, அது சமூகக்கூட பகுதிக்கு வந்து காரில் இருந்து ஒருவர், இறந்துபோனவரை சத்தமாக அழைத்தார், அவர் நீளமான முடியுடன் உயரமாக இருந்தார். இறந்து போனவர் வந்து மேற்கூறிய நபருடன் பேசிவிட்டு அந்த நபர் இறந்துபோனநபருடன் பங்களாவிற்கு சென்றார். 11.12.2006 தேதியிட்ட மூன்றாவது வாக்குமூலத்தில், சுரேஷ்தாபா தனது முந்தைய விவரிப்பினை மாற்றி, சமூக கூட வாயிலுக்கு வெள்ளிநிற கார் வந்தது, ஓட்டுநர் ஒலிப்பான் சத்தத்தை எழுப்பினார், இறந்துபோனவர் தனது பங்களாவிலிருந்த கதவை திறந்து, வெளியே வந்தார். கதவை மூடினார். பின்னர் பங்களா எண் 5 ஐ நோக்கி சென்றார், திரும்பி வரும்போது, கார் அவரது பங்களா அருகே நின்று கொண்டிருந்தது. ஓட்டுநர், இறந்தவருக்கு முன்னால் சென்றார், இருப்பினும் அவர்களிடையே எவ்வித பேச்சுவார்த்தையும் இல்லை. பிறகு, அவர் முன்னால் சென்று 'கேப்டன், கேப்டன்' என்று

அழைத்தார். பிறகு அவர்கள் பேசிக் கொண்டிருந்தனர். இறந்து போனவருடன் சென்ற நபரின் காரில், 2–3 நபர்கள் அமர்ந்திருந்தனர். 09.01.2007 தேதியிட்ட ரமேஷ் தாகோல் என்ற மற்றொரு செக்யூரிட்டி பணியாரின் வாக்குமூலத்தில், 2–ம் எதிரியின் வாகனம் இரவு சுமார் 2 மணி முதல் 2:30 மணியளில் திரும்பி வந்ததாகவும், அவர் தனது பங்களாவிற்கு சென்றதாகவும் குறிப்பிடுகிறார். அவர் முன்பு கொடுத்த வாக்குமூலம் தவறானது, என்று கூறுகிறார். டாக்டர் அஜித்சிங், 31.12.2006 தேதியிட்ட வாக்குமூலத்தில், இறந்துபோனவர் மற்றும் இறந்துபோனவருடன் 1 மற்றும் 2–ம் எதிரி அவர்களின் வீட்டிற்கு, ஏப்ரல் 2006 இல் அவர் சென்றதைக் குறிப்பிடுகிறார் அங்கு அவர் இறந்தப்போனவரையும், 2–ம் எதிரியையும் ஒரு ஊஞ்சலின் மேல் இருப்பதையும் பார்த்தார், அப்போது 1–ம் எதிரி அருகில் இருந்தார். இதை அவர் 13.05.2006 அன்று பார்த்தார். ஜர்னிஷின் (முகமது அஸ்கர்) மனைவி சஜிதா பேகத்தின் வாக்குமூலம் எதிரி – மனுதாரர்களை, குற்ற சாடலில் தொடர்பு படுத்தவில்லை. இறந்துபோனவரின் சகோதரர் திரு. மஞ்சித்சிங் கடந்த காலத்தில், 1–ம் எதிரியுடன் தொடர்பு கொண்டதைக் குறிப்பிட்டு, அதில் இறந்துபோனவர், எதிரியிடம் தான், எல்லாவற்றையும் வாங்க விரும்புவதாகவும், காலம் அனுமதித்தால் அவரின் மனைவியையும் வாங்குவேன் என்றும் கூறியதாகக் குறிப்பிடுகிறார். இந்த பேச்சுவார்த்தை தொலைபேசி மூலம் இருந்தது."

14. உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவைப் பார்வையிட்டதில், விசாரணை முகமையால் சேகரிக்கப்பட்ட சில சான்றுப் பொருட்களுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற அறிக்கையானது சுருக்கமான முறையில் குறித்துக் காட்டப்பட்டுள்ளது. சுரேஷ் ஷெர்பகதூர் தாபா, கலெக்டர் தாக்கூர்சிங், ரமேஷ் தாகோல், மஞ்சித்சிங், டாக்டர். அஜித்சிங் மற்றும் சஜிதாபேகம் ஆகியோரின் வாக்குமூலங்கள் குறியிடப்பட்டுள்ளன. சான்றாவணங்களை பார்வையிட்டதில், படித்து பார்த்ததிலிருந்து, அவர்களின் வாக்குமூலங்கள் முழுமையாக கருத்தில் கொள்ளப்படவில்லை அல்லது ஒரு குறிப்பிட்ட நாளில் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்களின் பகுதி மட்டுமே, கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன மற்றும் வாக்குமூலங்கள், முந்தைய அல்லது பிந்தைய சமயங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது தெளிவாக தெரிவது பற்றி, குறிப்பிடபடவில்லை ஹிராமன் தியானேஷ்வர் சவுதிரி, தமேஷ் முரளிதர், மோகன், வி.எஸ். அசோக்குணாஜி தோசர், மெஹபூப் தஸ்தகிஷேக் மற்றும் ரக்மா ஷிவ்ராம் வாக்மரே ஆகியோரின் வாக்குமூலங்கள் விசாரணை முகமையால் பதிவு செய்யப்பட்டதை 1 மற்றும் 2 ம் எதிர்மேல்முறையிட்டாளர்களை விடுதலை செய்கையில் உயர்நீதிமன்றம் குறித்து சட்டபடி பரிசிலித்தது, இது ஒரு தடயமற்ற கொலை வழக்கு என்ற சங்கதியை அகற்றமுடியாது. விசாரணை முகைமையில் சேகரிக்கப்பட்ட சான்று பொருட்களின் மூலமே குற்றம் சாட்டப்பட்டவர் பிடிப்பட்டிருக்கக்கூடும்.

15. 1–ஆம் எதிர்மேல்முறையீட்டாளரக்கு விவரக்குறிப்பு, உளவியல் விவரக்குறிப்பு, பாலிகிராஃப் பரிசோதனை மற்றும் மூளை மின்

அலைவுகளின் பதிவுக்குறிப்பு (BEOS) பரிசோதனைகள் உட்பட உளவியல் மதிப்பீடு உள்ளிட்ட சோதனைகள் நடத்தப்பட்டன. மேலும் இந்த பரிசோதனை, 1–ம் எதிர்மேல்முறையீட்டாளரின் மற்ற நான்கு நெருங்கிய கூட்டாளிகளான, அதாவது அஹோக் சுஜ்ராஜ் சௌத்ரி, மெஹபூப் தாஸ்தஹிர் ஷேக், பலிராம் சிந்து காடே மற்றும் மோகன் விஜயம்மா ஷிரிதரன் ஆகியோர் மீதும் நடத்ததப்பட்டது.

16. 1 ம் எதிர்மேல்முறையீட்டாளர் மீது, உள்துறை, மஹாராஷ்ட்ரா அரசு தடய அறிவியல் ஆய்வக இயக்குனரகம் நடத்திய பரிசோதனை அறிக்கையானது, கேப்டன் மன்மோகன்சிங் கொலையில், 1–ம் எதிர்மேல்முறையீட்டாளர் ஈடுபட்டுள்ளார் என்பதை வெளிப்படத்துகிறது. அவருடைய உளவியல் விவரக்குறிப்பும், சமூக விரோத போக்கை கொண்ட, ஒரு சமூக விரோத ஆளுமையாக, அவரைச் சுட்டிக்காட்டுகின்றன. அந்த அறிக்கையின் சம்பந்தபட்ட பகுதி கீழே தரப்பட்டுள்ளது:–

> "முகமது ஷட்டர்ப் மீது நடத்தப்பட்ட உளவியல் மதிப்பிடுதலில், பாலிகிராப் கேள்விகளாலும் மூளை மின் அலைவுகளின் பதிவுக்குறிப்பில் (BEOS) உள்ள அனுபவ அறிவின் குறிப்பிடத்தக்க தேடல் ஆய்வு கேள்விகள், ஏமாற்றுதலை சுட்டிக்காட்டி, கேப்டன் மன்மோகன் சிங் கொலையில், அவரின் ஈடுபாட்டினை தெளிவாகக்காட்டுகிறது. இந்த காண் முடிவு, அவரின் சமூக விரோத ஆளுமைத்தன்மையையும், மற்றும் தன்னை சமூகரீதியாக விரும்பப்படுகின்ற நபராய் சுட்டிக்காட்டிக் கொள்ள கூடிய போக்கினையும்

கொண்டவர் என்ற காண்முடிவுடன் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நார்கோ பகுப்பாய்வு முறைக்கு, அவர் எழுத்துப்பூர்வ சம்மதம் தர மறுத்ததால் அதை நடத்தவில்லை.

(வலியுறுத்திக் கூறப்பட்டது).

17. இது தவிர, இறந்து போனவரை கொல்வது பற்றிய கேள்விக்கு, பதிலளித்தலில் வஞ்சகம் இருப்பதாக, மற்ற நான்கு நபர்களைப் பற்றிய கருத்து காட்டுகிறது. அறிக்கையின் சம்பந்தப்பட்ட பகுதி கீழே கொடுக்கபப்பட்டுள்ளது:–

"அசோக் கஜ்ராஜ் சவுத்ரி மற்றும் மெஹபூப் தஸ்தகி ஷேக் ஆகியோர், கேப்டன் மன்மோகன் சிங் கொலை வழக்கில் உளவியல் விவரக்குறிப்பு மற்றும் பாலிகிராஃப் தேர்வு ஆகிய மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டவர்களில் அடங்குவர். அசோக் கஜ்ராஜ் சவுத்ரியைப் பொறுத்தவரை, கொலை பற்றித் தெரியும் என்பதை மறுத்தாலும், அவரது பாலிகிராஃப் பரிசோதனையில் கொலை பற்றி வெளிப்படுத்தி உள்ளது. இருப்பினும், அவரது பாலிகிராஃப் பரிசோதனையில் கேப்டன் சிங்கின் மரணம் தொடர்பான கேள்விகள் கேட்டபோது, மறைத்து, ஏமாற்ற முயற்சித்தது, இந்த பலியான நபரை, யார் கொலை செய்தது என தெரிந்ததையும், இந்த கொலை பற்றிய தகவல்களை மறைக்க யாரோ அவரிடம் கேட்டுள்ளதையும் காட்டுகிறது. மெஹபூப் தஸ்தகி ஷேக்கை பொருத்த வரையில், அவர் கேப்டன் மன்மோகன் சிங்கின் கொலையை பார்த்ததாகவோ அல்லது உதவியதாக

மறுத்தாலும் அல்லது அதைப்பற்றி எந்த அறிவும் இல்லை என்றாலும், அவரது பாலிகிராஃப் பரிசோதனையில், கேப்டன் மண்மோகன் சிங்கை யார் கொன்றனர் என தெரிவது பற்றிய கேள்வி சம்பந்தமாக 'ஏமாற்றுதல்' என்பதைக் காட்டுகிறது.

(வலியுறுத்திக் கூறப்பட்டது)

18. உயர்நீதிமன்றம் அதன் எதிர்ப்புக்குள்ளான உத்தரவு மூலம், எதிரி மற்றும் 1–ம் எதிர்மேல்முறையீட்டாளரின் மற்ற கூட்டாளிகளின் உளவியல் விவரக்குறிப்பு, பாலிகிராஃப் பரிசோதனை மற்றும் மூளை மின் அலைவுகளின் பதிவுக் குறிப்பு (BEOS) பரிசோதனைகள் உட்பட உளவியல் மதிப்பீட்டை குறித்துக்காட்டாமல், முழுசாட்சியத்தையும் இரண்டு பத்திகளுக்குள் உள்ளடக்கி, 1 மற்றும் 2–ம் எதிர்மேல்முறையீட்டாளர்களை விடுவிக்க உத்தரவிட்டது.

19. எதிரியைத் தண்டிக்க உளவியல் சார் மதிப்பீடு பரிசோதனை அறிக்கை மட்டுமே போதுமானதாக இல்லை என்றாலும் கட்டாயமாக, அது ஒரு முக்கிய சான்று ஆகும். இந்த பதிவாவணத்தின் சான்றுக்கு அப்பால், குற்றத்தை வனைவதற்காக கூட, வழக்கு நிருபிக்கப்படவில்லை என்றும் அதற்காக வழக்கு முகாந்திரத்தை மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டும் என்று உயர்நீதிமன்றம் தெரிவித்திருக்க கூடாது.

20. இந்த வழக்கு குறித்து இந்நீதிமன்றத்தால் வகுததுரைக்கப்பட்ட சட்டத்தின் துணை கொண்டு சங்கதிகளை ஆராய்ந்தால், விசாரணை முகமையால் சேகரிக்கப்பட்ட சான்றுகளுடன் முழு குற்ற அறிக்கையுடன் சேர்த்து தாக்கல் செய்ததை உயர் நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது. மாறாக

விசாரணையின் போது, பதிவு செய்யப்பட் சிலரின் வாக்குமூலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது முழுமையாக மனக்கூறுதனை செலுத்தாமையையே காட்டுகிறது. கடுங்குற்றத்தின் விசாராணையை முறிக்கும்வண்ணம், உயர் நீதிமன்றம் பெற்றிராத அதன் அதிகாரத்தை செலுத்தியுள்ளது.

21. மேலே குறிப்பிடப்பட்ட காரணங்களுக்காக, மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது மற்றும் உயர்நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது.

மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

<u>பொறுப்புத் துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."